# யக்கலமுள்ள பிரதேச சபை

## காலி மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

---------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுன் 10 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

-----------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான யக்கலமுள்ள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

----------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபை கூட்டங்களில் மந்திரிமார் படி ரூபா 638,000 தொகை எனினும் ரூபா 453,750 இற்கான மோட்டார் சைக்கிள் கடன் தவனைப்பண அறவீடுகளைக் கழித்த பின்னர் ரூபா 229,250 இனை மாத்திரம் மந்திரிமார் படி என

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகள் ரூபா 453,750 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 12 செலவுத் தலைப்புகள் தொடர்பான செலவுகள் ரூபா 16,809,982 எனினும், வாக்குபடி பேரேட்டில் காட்டப்பட்டிருந்த பிரதான பேரேட்டின் பதிவு செய்யும் போது ரூபா 16,953,446 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான செலவுகள் ரூபா 143,464 மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது முன் பள்ளி மாணவர்களின் சீருடைகளுக்காக மற்றும் முன் பள்ளி மாணவர்களின் செயலமர்வுகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 118,970 இற்கான செலவுகள் மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மூலதனச் செலவுகள் என நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) பஹலவில பாலம் நிர்மாணிக்கும் வேலைக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த ரூபா 488,539 தொகை நிதிக் கூற்றுகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய மூலதன உதவிகள் ரூபா 12,891,356 தொகையினை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி மற்றும் கடன் பட்டோர் ரூபா 12,891,356 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 11,136,114 தொகையின் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வகைப்படுத்தப்படாமல் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மின் உபகரண இருப்பு ரூபா 164,391 எனினும் அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 117,077 என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வழங்கல்கள் மற்றும் உபகரணச் செலவு ரூபா 47,314 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது கட்டட நிர்மாண வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 784,214 தொகையினை மூலதனப் படுத்தியிருக்கவில்லை.

(ஐ) சபைக்கு சொந்தமான வெலெந்தாவ காணியில் நடத்தப்பட்டுவரும் இருதரப்பு தொழில் முயற்சியில் செயற்பாட்டு விளைவுகளை காட்டுவதற்காக தனிப்பட்ட கணக்கொன்று சமர்பித்திருக்கவில்லை.

1.3.4 இணக்கங் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

---------------------------------------------------------------------------------

04 கணக்கு விடயங்களுடன் தொடர்பாக குறிப்பிட்ட கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் காட்டப்படும் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் காட்டப்படும் மீதிகளிடையே ரூபா 1,012,710 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 97,872,904 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளதுவரை பேணப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், நாளதுவரை பேணப்பட்டிருந்த கடன் பதிவேடு ஆகிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 677,925 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 261,989 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 ஏக்கர்வரி, வர்த்தக அனுமதிப்பத்திரம் மற்றும் வாடகை

------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 243,193 இற்கான ஏக்கர்வரி, ரூபா 73,250 இற்கான வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் ரூபா 204,672 இற்கான வாடகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரினால் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 411,210 இற்கான நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 4,026,575 இற்கான முத்திரைக் கட்டணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.3 வீதவரி

-----------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்டுள்ள பகுதிகள் என கணிக்கக் கூடிய பாதை முறைமை வசதிகள், மின்சார வசதிகள், தொலைபேசி வசதிகள், நீர் வசதிகள் மற்றும் கழிவுப் பொருட்கள் அகற்றும் வசதிகள் காணப்படும் யக்கலமுள்ள நகரம் போன்ற பிரதேசங்கள் காணப்படும் போதும் அவ் இடங்களை இனங்கண்டு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) மற்றும் (2) பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் வீதவரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

-------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்கச் சொத்துகள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையின் பிரகாரம் 2013 ஆண்டு தொடர்பாக உப தலைவர் உட்பட 09 மந்திரிமாரினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு திறமையின்மை

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

3.2.1 பதவியணிக் கடன்

-------------------------------

சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுள்ள, ஓய்வு பெற்றுள்ள, சேவையை விட்டு சென்றுள்ள 12 ஊழியர்களிடம் அறவிடப்படவேண்டிய ரூபா 41,751 இற்கான கடன் மீதியொனறினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2.2 உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடனைத் திருப்பிச் செலுத்தாமை

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

சபையினர் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் ஆயுள்வேத மருத்துவ நிலையம் மற்றும் அலுவலக கட்டடம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து 2013 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 10,231,092 தொகையொன்றினை பெற்றிருந்தது 2010 மூன்றாவது காலண்டின் பின்னர் தவணைப்பணம் மற்றும் வட்டி செலுத்தியிருக்காமையால் கணக்காய்வு திகதியாகிய 2014 மார்ச் 20 வரை ரூபா 2,043,227 இற்கான தவணைப்பணமும், ரூபா 2,870,707 இற்கான வட்டியும் உட்பட மொத்தம் ரூபா 4,913,934 தொகையொன்று உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது.

3.2.3 தீர்க்கப்படாத கணக்கு

-----------------------------------

05 வருடங்களை விட மிகையான காலம் முதல் தொடர்ந்து காணப்படும் 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா 1,225,092 இற்கான மீதி ஒன்றினை இனங்கண்டு கணக்கு தீர்ப்பதற்கு அல்லது தெளிவாக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2.4 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------

பிரதேச சபையின் மந்திரி ஒருவருக்கு 2013 ஜுன் மாதத்திற்காக 2013 ஜுன் 21 திகதி சபை மந்திரிமார் படி என ரூபா 5,000 செலுத்தியிருந்த போதும் மீண்டும் ஒருமுறை 2013 ஜுன் மாதத்திற்கான மந்திரிமார் படி ரூபா 5,000 2013 ஜுலை 19 திகதி சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்